# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 85/மா/2022**

**நாள் : 4.8.2022**

திரு. M. விஜயன் (ம) திரு. B. விஜயகுமார்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்–2,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதிநகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் ஆகியோரின் 28.06.2022 நாளிட்ட மனு 29.06.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 85/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதிநகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் ஆகியோரின் முறையீட்டு மனுவில்,

> “சென்னை – 600 103, மணலி, மண்டலம் - 02, பகுதி – 2, வார்டு – 6, சடயங்குப்பம் கிராமம், டி.கே.பி.நகர், கதவு எண்.117 என்ற இடத்தில் ஜானகிராமன் ஸ்டீல் & பவர் (Janakiraman Steel and Power Pvt. Ltd. CIN No.U27101TN2004PTC052868) என்ற இரும்பு உருக்காலை தொழிற்சாலை இயங்கிக்கொண்டு வருகிறது. இந்த தொழிற்சாலையில் இருந்து மிக அதிகப்படியான புகை வெளியேறி சுற்றுப்புற காற்றினை அதிக அளவில் மாசுபடுத்துவதுடன் அருகில் இருக்கும் குடியிருப்பு பகுதிகள் என சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் சாம்பல் படிந்து விடுகிறது.

மேலும் இங்கே வசிக்கும் பொது மக்களுக்கு பல நேரங்களில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு நீண்ட நாள் உடல் உபாதைகளான சுவாசக் கோளாறு, ஆஸ்துமா போன்ற பிரச்சனைகள் ஏற்பட காரணமாக உள்ளது. இது தொடர்பாக புகார் அளிக்கும்போதும் கள விசாரணையின்போதும் மட்டும் மேற்கண்ட தொழிற்சாலையில் இருந்து வெளியாகும் புகையின் அளவினை குறைத்து மற்ற நேரங்களில் விதிகளை மீறி காற்று மாசினை ஏற்படுத்துகின்றனர். தீவிர விசாரணை செய்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அதிகாரிகளும் மேற்கண்ட தொழிற்சாலையின் விதிமீறல்களுக்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919ன் படி உள்ளூர் மக்களின் பொது சுகாதாரத்தை பேணிக்காப்பது உள்ளாட்சி அமைப்புகளின் முதன்மை கடமையாகும். எனினும் இந்த பிரச்சனை தொடர்பாக மண்டலம்-02 அலுவலருக்கு எழுத்துப்பூர்வமான புகார் அளித்தும் தற்போது வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்த பிரச்சனையின் தீவிரத்தன்மை காரணமாக உடனடியாக உள்ளாட்சி அமைப்பு முறைமன்றத்திற்கு மனு அனுப்ப வேண்டிய சூழ்நிலை உருவானது. எனவே இந்த மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட பொது நலன் சார்ந்த புகார் மனுவினை தீர விசாரணை செய்து மேற்கண்ட சுற்றுச்சூழல் மாசுபாட்டினை நீக்கும் வண்ணம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.”

**2. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.07.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 20.07.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர்கள் 27.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :

> சென்னை, மணலி சடயங்குப்பம் டி கே பி நகர் கதவு எண் 117 என்ற இடத்தில் ஜானகிராம் ஸ்டீல் அண்டு பவர் என்ற இரும்பு உருக்காலை தொழிற்சாலை இயங்கிவருகிறது. இத்தொழிற்சாலையிலிருந்து அதிக அளவில் புகை வெளியேறி, அங்கு வசிக்கும் மக்களுக்கு சுவாசக் கோளாறு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் அதிக அளவு புகை குறித்து மாநகராட்சி அலுவலகம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
>
> எனவே மேற்கண்ட இடத்தில் வசிக்கும் பொதுமக்களின் சுகாதாரத்தை பேணி காத்திடும் வகையில், மேற்கண்ட தொழிற்சாலையிலிருந்து அதிக அளவில் புகை வெளியேறுவதை தடுத்திடவும் மேலும் அனுமதிக்கப்பட்ட அளவிலேயே புகை வெளியேற மாநகராட்சி நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் சுகாதார ஆய்வாளர் 27.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

சென்னை மாநகராட்சி மண்டலம் –2 மணலி சடயங்குப்பம் டி கே பி நகரில் இயங்கிவரும் ஜானகிராம் ஸ்டீல் அண்டு பவர் என்ற இரும்பு உருக்காலை தொழிற்சாலையிலிருந்து வரும் அதிக அளவு புகை குறித்து வரப்பெற்ற புகாரையொட்டி, மாசு கட்டுப்பாட்டு வாரியம் சென்னை மாநகராட்சி மண்டலம் 2–க்கு அனுப்பியுள்ள 26.7.2022 நாளிட்ட கடிதத்தில் "மேற்கண்ட தொழிற்சாலையை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டது என்றும், மேற்கண்ட தொழிற்சாலையிலிருந்து அனுமதிக்கப்பட்ட அளவைவிட புகை வெளியேறுகிறது என்றும், எனவே, அத்தொழிற்சாலைக்கான மின் இணைப்பு துண்டித்திட அறிவுறுத்தப்பட்டு, கடந்த 23.6.2022 அன்று மேற்கண்ட தொழிற்சாலைக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது" என தெரிவித்துள்ளது. மேலும், மண்டல அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட தொழிற்சாலை தற்போது இயங்கவில்லை என கண்டறியப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் மேலும் மேற்கண்ட தொழிற்சாலைக்கான அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழிலுக்கான (D&O) உரிமத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்–2 அவர்களின் 26.7.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**மேலும் மண்டல அலுவலர், மண்டலம்–2 அவர்கள் தனது 26.7.2022 நாளிட்ட கடிதத்தில்,**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -2 (மணலி), வார்டு 16, சடையங்குப்பத்தில் இயங்கி வந்த ஜானகிராம் ஸ்டீல் & பவர் பிரைவேட் லிமிடெட் என்ற இரும்பு உருக்கும் தொழிற்சாலையினை நேரில் சென்று மண்டலம்-2 அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் மேற்கண்ட தொழிற்சாலை மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தொழிற்சாலை இயங்காமல் இருப்பது தெரிய வருகின்றது.

மேலும், இது குறித்து ஜானகிராம் ஸ்டீல் & பவர் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையின் பொறுப்பாளர் அவர்களை தொடர்பு கொண்டு விசாரித்ததில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரை கடிதம் அனுப்பியதால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தொழிற்சாலை தற்போது வரை இயங்கவில்லை என தெரிவித்தார். பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தொழில் உரிமம் பெறப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டது அதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தடையின்மை சான்று பெற்று பெருநகர சென்னை மாநகராட்சியின் தொழில் உரிமம் பெறப்பட்டது எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாசுக்காட்டுப்பாட்டு வாரியத்தின், நடவடிக்கையின் அடிப்படையில் ஜானகிராம் ஸ்டீல் & பவர் பிரைவேட் லிமிடெட் (மண்டலம்-2) மணலி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விளக்கம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது, என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின், மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், அம்பத்தூர் இம்முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ள 27.7.2022 நாளிட்ட கடிதத்தில், 4.4.2022 அன்று திருவாளர்கள். ஜானகிராம் ஸ்டீல் அன்ட் பவர் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலையை ஆய்வு செய்ததில் சில விதிமீறல்கள் கண்டறியப்பட்டதால், 12.4.2022 அன்று விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியதாகவும்,

விளக்க அறிவிப்பில் சுட்டிக் காட்டப்பட்ட விதிமீறல்கள் சரி செய்யப்பட்டதாக அத்தொழிற்சாலையை 22.4.2022 அன்று தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மீண்டும் 11.5.2022 அன்று தொழிற்சாலையை ஆய்வு செய்ததில், வாரியத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விதிமீறல்கள் முற்றிலும் சரிசெய்யப்படாததால், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அத்தொழிற்சாலையை மூடுவதற்கு உத்தரவு பிறப்பித்ததாகவும், அதன் பேரில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின் இணைப்பு 23.6.2022 அன்று துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், அத்தொழிற்சாலை தனது 27.6.2022 நாளிட்ட கடிதத்தில், வாரியத்தால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைகளை சரி செய்துள்ளதால், தொழிற்சாலை மூடுவதற்கு பிறப்பிக்கப்பட்ட மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்தரவை ரத்து செய்யக் கோரியும், மின் இணைப்பை மீண்டும் தரக் கோரியும் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்தொழிற்சாலையின் கோரிக்கையின் பேரில் மீண்டும் ஆய்வு செய்யப்பட உள்ளதாகவும், ஆய்வின் அடிப்படையில் குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருந்தால், பரிந்துரைகளை வாரியத்தின் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள் மற்றும் வாக்குமூலம், மண்டலம்-2ன் மண்டல அலுவலர் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன :

சென்னை 103, மணலி, மண்டலம்-2, பகுதி - 2, வார்டு – 06, சடயங்குப்பம் கிராமம், எண்.117 என்ற இடத்தில் ஜானகிராமன் ஸ்டீல் & பவர் (Janakiraman Steel and Power Pvt. Ltd.,) என்ற இரும்பு உருக்கும் தொழிற்சாலை இயங்கி வருவதும், அத்தொழிற்சாலையிலிருந்து மிக அதிகப்படியான புகை வெளியேறி சுற்றுப்புற காற்றினை அதிக அளவில் மாசுபடுத்துவதால், அருகில் இருக்கும் குடியிருப்புப் பகுதிகளில் சாம்பல் பரவுவதாகவும், அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு சுவாசக் கோளாறு மற்றும் ஆஸ்துமா போன்ற பிரச்சினைகள் ஏற்பட காரணமாக உள்ளது என்றும் இது குறித்து மண்டல அலுவலர்-1க்கு புகார் அளித்தும் நடவடிக்கை எதுவும் இல்லாததால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்துக்கு மனு செய்துள்ளதையும் அறிய முடிகிறது.

மண்டலம்-2-ன், மண்டல அலுவலரின் 26.7.2022 நாளிட்ட அறிக்கையின் வாயிலாக, மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள ஜானகிராமன் ஸ்டீல் & பவர் பிரைவேட் லிமிடெட் என்ற இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஆய்வு செய்யப்பட்டதும், அத்தொழிற்சாலையின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இயங்காமல் இருப்பதும் தெரியவருகிறது. மேற்குறிப்பிட்டுள்ள தொழிற்சாலையின் பொறுப்பாளர் வாயிலாக, தொழிற்சாலையானது தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, தொழிற்சாலையின் மின் இணைப்பை துண்டிக்க பரிந்துரை செய்யப்பட்டதும், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, தற்போது தொழிற்சாலை இயங்கவில்லை என்பதையும் அறியமுடிகிறது. மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தடையின்மை சான்றைப் பெற்றுள்ளதன் பேரிலேயே பெருநகர சென்னை மாநகராட்சியின் தொழில் உரிமம் தரப்பட்டது என்பதும் தெரியவருகிறது.

மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கையின் அடிப்படையில் ஜானகிராமன் ஸ்டீல் & பவர் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையின் தொழில் உரிமத்தை ரத்து செய்ய மண்டலம் -2 (மணலி) வருவாய்த்துறை உரிமம் பிரிவு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதும் தெரியவருகிறது.

விரிவான விசாரணைக்குபின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது :

**1950–ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 21–ஆம் பிரிவில்,**

**“Protection of life and personal liberty -**

No person shall be deprived of his life or personal liberty except according to procedure established by law," என கூறப்பட்டுள்ளது.

மேலும், 1950-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 21-ல் தூய்மையான தண்ணீர் மற்றும் தூய்மையான காற்று இரண்டும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும் என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தனது தீர்ப்புரைகளில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது :

**<u>Article 21 includes the right to a healthy environment -</u>**

The Supreme Court held that the right to life under Article 21 of the Constitution is a fundamental right and includes the rights to free water and free air from pollution for the full enjoyment of life. If anything endangers or impairs that quality of life in derogation of laws a citizen has recourse of Article 32 of the Constitution for removing the pollution of water or air which may be detrimental to life. The Court has stated that Article 21 includes' the enjoyment of pollutant-free water and air for full enjoyment of life,' as far as the release of industrial pollution into rivers is concerned.

**<u>Right to Clean Environment</u>**

The Right to Life under Article 21 means a life of dignity to live in a proper environment free from the dangers of diseases and infection. Maintenance of health, preservation of the sanitation and environment have been held to fall within the purview of Article 21 as it adversely affects the life of the citizens and it amounts to slow poisoning and reducing the life of the citizens because of the hazards created if not checked .

1950-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு -21-ல் தூய்மையான காற்றையும், தூய்மையான நீரையும் தனிமனிதன் பெறுவது என்பது அடிப்படை உரிமையாகும் என கூறப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மாண்பமை உச்சநீதிமன்றம் தனது தீர்ப்புரைகளில் உறுதிப்படுத்தியுள்ளதும் மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மனுதாரர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அளித்த மனுவின் மீது, உடன் நடவடிக்கை மேற்கொண்டு, மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டதில், தொழிற்சாலையிலிருந்து அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் புகை வருவதால், காற்று மாசுபட்டுள்ளது கண்டறியப்பட்டு, தமிழ்நாடு மின் வாரியம் மின் இணைப்பை துண்டிக்க அறிவுறுத்தியதின் பேரில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தற்போது தொழிற்சாலை இயங்கவில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையின் அடிப்படையில் மண்டலம் -2ன் வருவாய் பிரிவு உரிமம் வழங்கியுள்ளதால், அவ்வாரியத்தின் தற்போதைய அறிக்கையின் பேரில் தொழிற்சாலையின் உரிமம் மண்டலம்-2ன் வருவாய்ப்பிரிவு மூலம் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கிற மண்டலம் -2ன் மண்டல அலுவலரின் அறிக்கையை இம்முறைமன்றம் பதிவு செய்கிறது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையின் அடிப்படையில், மண்டலம்-2ன், வருவாய் பிரிவு மூலம் தக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. அதன் மூலம் 1950-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 21-ல் கூறியுள்ளவாறு அப்பகுதி மக்களின் அடிப்படை

உரிமையான தூய்மையான காற்றும், தூய்மையான தண்ணீர் (ம) சுகாதாரத்தையும் உறுதி செய்ய மண்டலம் -2ன் உதவி ஆணையாளர் / மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

மேலும், தொழிற்சாலையின் மூலம் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் மாசுகள் வெளியேறி காற்று மற்றும் நீர் மாசுபடாமல் இருப்பதை உறுதி செய்ய சுகாதார அலுவலருக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பித்து அடிக்கடி கள ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டும் எனவும், ஆய்வு செய்து ஆய்வு அறிக்கைகளை உடனுக்குடன் அனுப்பவும், அறிக்கைகள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 2ன் மண்டல அலுவலர்/உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது. கள ஆய்வு மேற்கொண்டு அனுமதிக்கப்பட்ட அளவிற்குமேல் காற்று மாசு ஏற்படுத்துதல் போன்ற குறைபாடுகள் உள்ள தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறும் கள அலுவலர்கள் மீது துறை ரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் உதவி ஆணையர் / மண்டல அலுவலர் - 2க்கு இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு-21, தனி மனிதனுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளான தூய்மையான காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உறுதி செய்ய, தொழிற்சாலைகளில் அடிக்கடி ஆய்வு செய்து, அவற்றின் மூலம் மாசுகள் ஏற்படுவதைத் தடுத்து பொது மக்களின் சுகாதாரத்தைப் பேணிக் காக்க அறிவுறுத்தி, சுற்றறிக்கை ஒன்றினை அனைத்து உதவி ஆணையர்கள் / மண்டல அலுவலர்களுக்கு அனுப்ப பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரைத்து ஆணையிடுகிறது. அவ்விதம் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வின்படி சுகாதாரக் கேடுகள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும்படியும், அவ்வாறு செய்யாமல் தொழிற்சாலைகளின் தவறுகளுக்கு உடந்தையாக செயல்படும் அலுவலர்கள் மீதும் நடைமுறையிலுள்ள சட்டவிதிகளின்படி துறைரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M. விஜயன்,
3/13, 4–வது தெரு,
கருணாநிதி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

4) மாவட்ட ஆட்சியர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிங்கார வேலர் மாளிகை,
எண்.62, இராஜாஜி சாலை,
சென்னை – 600 001.

5) மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்,
எண்.77-A, தெற்கு நிழற்சாலை (South Avenue Road),
அம்பத்தூர் தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை – 600 058.

6) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.